# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,
## தேசிய பொலிசுக் கலைக்கழகச் சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, நவெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## 2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேசிய பொலிசுக் கலைக்கழகச் சட்டம்

[*2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ 39/2010*

**தேசிய பொலிசுக் கலைக்கழகம் ஒன்றைத் தாபிப்பதற்கும்; தேசிய பொலிசுக் கலைக்கழகத்தின் குறிக்கோளையும் பணிகளையும் இனம் காண்பதற்கும் அதன் முகாமைத்துவத்திற்கும் நிர்வாகத்திற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேசிய பொலிசுக் கலைக்கழகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

### பாகம் I

#### தேசிய பொலிசுக் கலைக்கழகத்தைத் தாபித்தல்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் “கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “தேசிய பொலிசுக் கலைக்கழகம்” என அழைக்கப்பட வேண்டிய கலைக்கழகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *தேசிய பொலிசுக் கலைக் கழகத்தைத் தாபித்தல்.*

(2) கலைக்கழகமானது (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரால் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**3.** எந்தக் குறிக்கோளுக்காக கலைக்கழகம் தாபிக்கப்படுகின்றதோ அந்தக் குறிக்கோள்களை எய்துவதற்கான நோக்கில் கலைக்கழகத்தின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தையும் *கலைக்கழகம், பொலிசு திணைக்களத்தின் நிர்வாகம் எந்த*

2-PL 006259-1,115 (2011/09)

*அமைச்சருக்குக் குறித்தொதுக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் பொறுப்பாதல் வேண்டும்.*

நிர்வாகத்தையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு பொலிசு திணைக் களத்தின் நிர்வாகம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கழகத்தின் குறிக்கோள்.*

**4**. கலைக்கழகத்தின் குறிக்கோள், கலைக்கழகத்தின் பயிற்சிக் காகத் தெரிவு செய்யப்பட்ட பொலிசு அலுவலர்களையும் சட்டத்தை வலுவுக்கிடும் வேறு அலுவலர்களையும் அவர்களது அந்தந்த உயர் தொழில்களில் தோதான பதவிகளில் நியமனம் செய்வதற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கும் மற்றும் வாய்ப்புகளை அளிப்பதற்கும் என அவர்களது உயர்தொழில்சார் அறிவையும் தேர்ச்சிகளையும் அபிவிருத்தி செய்வதற்கானதாதல் வேண்டும்.

*கலைக்கழகத்தின் பணிகள்.*

**5**. கலைக்கழகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்–

(அ) மாணவ அலுவலர்களுக்கு காவல்துறைப் பணியிலும் சட்டத்தை வலுவுக்கிடுதலிலும் சார்புடைய விடயங் களிலும் உயர்தரப் பயிற்சியும் கல்வியும் வழங்குதல்;

(ஆ) காவல்துறைப் பணியுடனும் சட்டத்தை வலுவுக்கிடுதலுட னும் நேரடியாகத் தொடர்புடைய பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ச்சியையும் கற்கைகளையும் மேற்கொள்ளு தல்; அத்துடன்

(இ) சம்பந்தப்பட்டவர்களின் நலனுக்காக காவற்றுறைப் பணியையும் சட்டத்தை வலுவுக்கிடுதலையும் பற்றிய உயர்தொழில்சார் அறிவை இயைபான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வெளியீடுகள் ஊடாக பரப்புதலும் பகிர்ந்து கொள்ளுதலும்.

*கலைக்கழகத்தின் தத்துவங்கள்.*

**6**. (1) கலைக்கழகமானது இச்சட்டத்தின் 5ஆம் பிரிவில் குறித் துரைக்கப்பட்ட அதன் பணிகளில் எவற்றையும் அல்லது பணிகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவா றான அத்தகைய செயல்களைச் செய்வதற்குத் தத்துவமுடைய தாதல் வேண்டும்.

(2) கலைக்கழகமானது, (1)ஆம் உட்பிரிவால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி -

(அ) கலைக்கழகத்தில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு மாணவ அலுவலர்களை அனுமதிக்கலாம்;

(ஆ) மாணவ அலுவலர்களிடமிருந்து அவசியமான விடத்து, விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கட்டணங்களை அறவிடலாம்;

(இ) தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவ அலுவலர்களின் தேர்ச்சித் திறனை கணிப்பிடும் நோக்கத்திற்காகப் பரீட்சைகளை நடாத்தலாம்;

(ஈ) கற்கை நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதன் மீது மாணவ அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கலாமென்பதுடன், "தேபொக" (தேசிய பொலிசு கலைக்கழகம்) என்னும் பின்பெயரீட்டுப் பட்டத்தையும் அளிக்கலாம் மற்றும் வழங்கலாம்;

(உ) இயைபான கல்வி அதிகாரசபைகளின் அங்கீகாரத் திற்கமைவாக, காவற்றுறைப் பணி மற்றும் சட்டத்தை வலுவுக்கிடுதல் தொடர்பிலான விடயங்கள்மீது திப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் வழங்க லாம்;

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினதும் இயைபான உள்ளூர் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகத்தினதும் அங்கீகாரத்திற்கமைவாக, ஏதேனும் பல்கலைக்கழகத்துடன் இணையலாம்;

(எ) கலைக்கழகத்தின் பணிகளுக்கு வசதியளிப்பதற்காக நாளேடுகளையும் இவற்றையொத்த ஆவணங்களையும் வெளியிடலாம் அத்துடன் பரப்பலாம்;

(ஏ) கலைக்கழகத்தின் பணிகளுக்கு வசதியளிப்பதற்காக காவற்றுறைப் பணிகளையும் சட்டத்தை வலுவுக்கிடுதலையும் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளலாம்;

(ஐ) கலைக்கழகத்தின் நோக்கங்களுக்கென நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் வேறு கட்டிடங்களையும் நிறுவலாம், சாதன வசதிகளை வழங்கலாம் அத்துடன் பேணலாம்;

(ஒ) கலைக்கழகத்தின் வினைத்திறனுள்ள செயற்பாட்டிற்கு தேவைப்படக்கூடியவாறான விரிவுரையாளர் பதவிகளையும் வேறு பதவிகளையும் உருவாக்கலாம்;

(ஓ) கலைக்கழகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய ஊழியர்களையும் முகவர்களையும் நியமிக்கலாம்;

(ஔ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து மானியக்கொடைகளை, அன்பளிப்புகளை அல்லது நன்கொடைகளைப் பெறலாம்;

(க) கலைக்கழகத்தின் நோக்கத்திற்கு பொருத்தமானதெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் பணத்தைக் கடனெடுக்கலாம் அல்லது திரட்டலாம்;

(ங) இச்சட்டத்தின் பயனைக்கொண்டு அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, அன்பளிப்பு, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுக்கலாம் அல்லது வைத்திருக்கலாம் அத்துடன் ஏதேனும் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்பனை செய்யலாம், ஈடு வைக்கலாம், குத்தகைக்கு விடலாம், கொடையளிப்பு செய்யலாம், உரித்து மாற்றலாம், உடைமையளிக்கலாம், சாட்டுதல் செய்யலாம், கொடுத்து மாற்றலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம்;

(ச) கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கலைக்கழகத்தால் அதன்

பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ செய்து கொள்ளலாம் அத்துடன் நிறைவேற்றலாம் அல்லது மேற்கொள்ள லாம் ; அத்துடன்

(ஞ) அதன் நிதிகளை சபை பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்ய லாம்.

## பாகம் II

### கலைக்கழகத்தின் முகாமைச் சபை

**7.** (1) கலைக்கழகத்தின் அலுவல்களின் முகாமையும் மற்றும் நிர்வாகமும் (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். இது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *கலைக்கழகத்தின் முகாமைச் சபையின் அமைப்பு.*

(அ) பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள், அதாவது-

(i) பொலிசுத் திணைக்களத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(ii) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரி பிரதிச் செயலாளர் பதவி வரிசையைச் சேர்ந்த சிரேஷ்ட அலுவலர் ஒருவர்;

(iii) பொலிசுத் திணைக்களத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அமைச்சுக்கான மேலதிகச் செயலாளர் ஒருவர்;

(iv) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி; அத்துடன்

(v) 13 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கலைக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்;

(ஆ) செயலாளருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட ஆற்றலைக் கொண்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன், சபையின் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகைதராதவிடத்து (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியிலும் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியிலும் மற்றும் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலும் குறிப்பீடு செய்யப்பட்ட சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளராக முறையாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) கலைக்கழகத்தின் பிரதம நிர்வாக அலுவலர் சபையின் செயலாளராக செயலாற்றுதல் வேண்டும்.

கலைக்கழகத்தின் இலச்சினை.

**8.** (1) கலைக்கழகத்தின் இலச்சினை சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) கலைக்கழகத்தின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) கலைக்கழகத்தின் இலச்சினை சபையின் தவிசாளரினதும் சபையின் வேறொரு உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயினும், கலைக்கழகத்தின் இலச்சினை ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளரால் சமுகமாயிருக்க இயலாதவிடத்து, தவிசாளரால் அதன் பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) கலைக்கழகம், கலைக்கழகத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட எல்லா சாசனங்களினதும் அல்லது ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

கலைக்கழகத்திற்குட்பட்ட கிளைகள்.

**9**. கலைக்கழகம், சபையால் காலத்துக்குக்காலம் அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கிளைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சபையின் கூட்டங்களும் கூட்டங்களிலான கூட்ட நடப்பெண்ணும்.

**10**. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் சபை அதன் நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தில் ஐந்து உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண் ஒன்றாக அமைதல் வேண்டும்.

உறுப்பினர்களிடையேயான வெற்றிடம் சபையின் நடவடிக்கைகளை செல்லுபடியற்றதாக்குதலாகாது.

**11**. சபையின் செயற்பாடு, முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுள்ளது அல்லது அதன் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாதலாகாது.

ஆண்டு மதிப்பீடுகள்.

**12**. சபையானது, சாத்தியப்படக்கூடிய விரைவில், கலைக்கழகத்திற்கு அவசியமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்கான விடயத்திற்கேற்ப ஆண்டு மதிப்பீடு களை அல்லது குறைநிரப்பு மதிப்பீடுகளை பொலிசுத் திணைக்களத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஊடாக திறைசேரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் III

### கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி

*நிறைவேற்றுப் பணிப்பாளர்.*

**13.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறைவேற்றுப் பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலைக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருப்பதற்கென ஆளொருவர் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். இவர் பொலிசு சிரேஷ்ட பிரதிப் பரிசோதகர் தலைமையதிபதியின் அல்லது பொலிசுப் பிரதிப் பரிசோதகரின் பதவி வரிசையை வகிக்கும் தகைமைபெற்ற சிரேஷ்ட அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) நிறைவேற்றுப் பணிப்பாளர் அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் ஓய்வுபெறல், இறப்பு, பதவி துறத்தல் அல்லது பதவியகற்றல் மூலம் அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பணிப்பாளர் அதன் பொருட்டு அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு பொலிசுத் திணைக்களத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஊடாக அனுப்பப்படும் எழுத்திலான அறிவித்தலின் மூலம் நிறைவேற்று அலுவலரான அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், குறித்துக் காட்டப்பட்ட காரணங்களுக்காக நிறைவேற்றுப் பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) எந்த நிறைவேற்றுப் பணிப்பாளர் தொடர்பில் (4)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ, அந்த நிறைவேற்றுப் பணிப்பாளர் அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியன்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு திகதியன்று அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(6) நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஆள் –

(அ) அவரது பதவியை வறிதாக்கும்பட்சத்தில் அல்லது நிறைவேற்றுப் பணிப்பாளராக அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்குமுன்னர் அவர் உறுப்பினரொருவராக இருந்த பொலிசுத் திணைக்களத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழியும்பட்சத்தில், அமைச்சர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு தகைமைபெற்ற அலுவலர் ஒருவரை நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்; அத்துடன் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராலும் வேண்டும்; அல்லது

(ஆ) சுகயீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணத்தினால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் அவரது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராக இருக்கும்பட்சத்தில், அமைச்சர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின் போது நிறைவேற்றுப் பணிப்பாளராக அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலரின் பதவியை வகிக்கும் ஆளை நியமித்தல் வேண்டும்.

*நிறைவேற்றுப் பணிப்பாளரின் கடமைகள்.*

**14.** (1) சபையின் பொதுவான பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைவாக, கலைக்கழகத்தின் அலுவல்களின் நெறிப்படுத்துதல் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் கலைக்கழகத்தின் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும். அவருக்கு கலைக்கழகத்தின் ஊழியர்களின் மற்றும் மாணவ அலுவலர்களின் பொதுவான நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) நிறைவேற்றுப் பணிப்பாளர், சபையின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக்காலம் அவசியமானதென அவர் கருதக்கூடிய வாறான அத்தகைய கடமைகளை கலைக்கழகத்தின் எவரேனும் ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாம். அத்தகைய பணிகளை அவ்வாறு கையளிக்கப்பெற்ற எவரேனும் ஊழியர் அவற்றை நிறைவேற்றுப் பணிப்பாளரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்பிற்கமைவாக நிறைவேற்றுதல் வேண்டும். அவ்வாறு கையளித்தல் எவ்வாறிருப்பினும் அவசியமானவிடத்து அத்தகைய பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுதல் நிறை வேற்றுப் பணிப்பாளருக்கு தகுதியுடையதாதல் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையுடனான கலந்தாலோ சனையுடன் கலைக்கழகத்தினால் மாணவ அலுவலர்களுக்கு வழங்கப்படவேண்டிய மருத்துவ, நலம்பேணல் மற்றும் பொழுது போக்கு வசதிகளைத் தீர்மானிக்கலாம்.

(4) நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கலைக்கழகத்தின் பாதுகாவலுக்கும் பாதுகாப்பிற்கும் அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

கலைக்கழகத்தின் பிரதம நிர்வாக அலுவலர்.

**15.** (1) சபையானது, கலைக்கழகத்தின் பிரதம நிர்வாக அலுவலராக சேவையாற்றுவதற்கு பொலிசு பிரதிப் பரிசோதகர் தலைமையதிபதியின் அல்லது சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப் பாளரின் பதவி வரிசையை வகிக்கும் அலுவலர் ஒருவரை, சபை யால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நியமிக்கலாம்.

(2) கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் அந்நோக்கத்திற்கென நிறைவேற்றுப் பணிப்பாளரால் வழங்கப் பட்ட அறிவுறுத்துதல்களுக்கிணங்க, கலைக்கழகத்தின் அலுவல் களை மேற்பார்வை செய்வதற்கும் இயைபுபடுத்துவதற்கும் வசதியளிப்பதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

*கலைக்கழகத்தின் பணியாட் டொகுதியின் நியமனமும் நிபந்தனைகளும்.*

**16**. சபை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக -

(அ) கலைக்கழகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அல்லது அவர்களைப் பதவிநீக்கம் செய்வதற்குமான கொள்கைகளையும் வகுத்துத் தொகுக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் என்ன விகிதப்படி ஊதியம் வழங்கப்படவேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) ஏற்புடைத்தானவிடத்து, அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நலனுக்காக சகாய நிதியங்களை அல்லது திட்டங்களை தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், எவையேனும் அத்தகைய நிதியங்களுக்கு அல்லது திட்டங்களுக்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

*கலைக்கழகத்தின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்கள் முதலியவர்களை நியமித்தல்.*

**17**. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் இயைபான அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் மற்றும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கலைக் கழகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் மற்றும் அவர்தொடர்பாக வும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத் துக்குச் சேவையாற்றவென அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை கலைக்கழகத்தின் தொழிலுக்கமர்த்துமிடத்து, அத்தகைய ஆளினால் கலைக் கழகத்திற்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின் பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றலுவலரினதும் சம்மதத்துடன், சபையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற் றலுவலரினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறான வையும், ஓய்வூதிய மற்றும் சகாயநிதிய உரிமைகள் தொடர்பான வையுட்பட்டவையுமான அத்தகைய நிபந்தனைகளின் மேல், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பணியாட் டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராக விருக்கும் அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்த வராகவிருத்தல் வேண்டும்.

## பாகம் IV

### கலைக்கழகத்தின் கற்கைச் சபையும் ஒழுக்காற்றுச் சபையும்

**18.** (1) கல்விசார் மற்றும் உயர்தொழிற் கற்கைகள் தொடர்பாக கலைக்கழகத்தின் அலுவல்கள், கற்கைச் சபைக்குரித்தாக்கப் படுதல் வேண்டும். கற்கைச் சபை பின்வருவேரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- கலைக்கழகத்தின் கற்கைச் சபை.

(அ) நிறைவேற்றுப் பணிப்பாளர்;

(ஆ) கலைக்கழகத்தின் பிரதான நிருவாக அலுவலர்;

(இ) சபையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆட்கள் இருவர்;

(ஈ) கலைக்கழகமானது எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருக்கக்கூடுமோ, அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(உ) கலைக்கழகத்திலுள்ள பல்வேறு கிளைகளின் தலைவர்கள்.

(2) கற்கைச் சபையானது, சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் மற்றும் சபையினால் அதற்கென ஆக்கப்படக் கூடிய எவையேனும் விதிகளுக்கும் அமைவாக, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கற்கைச் சபையானது, கலைக்கழகத்தின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சை என்பன மீது கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) கற்கைச் சபைக்கு, பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றின் பிரயோகமும், புரிகையும், நிறைவேற்றுகையும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) கலைக்கழகத்தினால் வழங்கப்படவுள்ள கற்கை நெறிகளையும் அத்தகைய நெறிகளின் பாடவிதானங்களையும் இனங்காணுதலும் விதந்துரைத்தலும்;

(ஆ) கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கற்கை நெறிகளுக்காக அளிக்கப்படவேண்டிய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்கள் என்பனபற்றி முடிபு செய்தல்;

(இ) அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்கள் என்பனவற்றுக்குத் தகைமைபெற விரும்புகின்ற மாணவர்களினால் பின்பற்றப்பட வேண்டிய பயிற்சி, தேறப்படவேண்டிய பரீட்சைகள் மற்றும் திருப்தி செய்யப்படவேண்டிய நிபந்தனைகள் என்பவற்றை இனங்காணுதல்;

(ஈ) சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்திற்கொள்ளுதலும் அதன் மீது அறிக்கையிடுதலும்;

(உ) கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பரீட்சைகள் என்பன சம்பந்தமான கருமங்களின் மீது சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தல்;

(ஊ) ஏதேனும் விசேட பாடத்தை அல்லது பாடங்களைக் கவனத்திற்கொண்டு அவைபற்றி அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கற்கைச் சபையின் உறுப்பினர்களாக விராத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல்;

(எ) பின்வருவனபற்றிச் சபைக்கு விதந்துரைத்தல்:-

(i) கற்கைநெறிகளுக்கும் பரீட்சைக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகள்;

(ii) ஆசிரியர்களாக அல்லது பரீட்சகர்களாக ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்கள்;

(iii) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் தேறியுள்ளதுடன் ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திசெய்துள்ளவர்களுமான எந்த ஆட்கள் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப்பட்டங்கள் என்பவற்றின் அளிப்புக்குத் தகவுடையவர்களோ, அந்த ஆட்கள்;

(ஏ) ஆராய்ச்சிப்படிப்புப்பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றுக்கான போட்டி முறையையும் நிபந்தனைகளையும் இணங்காணுதல்; அத்துடன்

(ஐ) ஆராய்ச்சிப்படிப்புப்பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றின் அளிப்புக்குப் பொருத்தமான ஆட்களைப் பெயர் குறித்தல்.

ஒழுக்காற்றுச் சபை.

**19**. சபையானது, நிறைவேற்றுப் பணிப்பாளரின் கலந்தாலோசனையுடன், பின்வருவோரைக் கொண்டுள்ள ஒழுக்காற்றுச் சபையொன்றை நியமித்தல் வேண்டும்-

(அ) கலைக்கழகத்தின் பிரதான நிருவாக அலுவலர்; அத்துடன்

(ஆ) நிறைவேற்றுப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தில் குறிப்பிட்ட துர்நடத்தையைப் பயனுள்ளமுறையில் தீர்த்துவைப்பதற்குத் தேவைப்பட்ட வேறெவரேனும் அலுவலர்கள்.

ஒழுக்காற்றுக் கோவையும் கோவையின் ஏற்புடைமையும்.

**20.** (1) மாணவ அலுவலர் ஒவ்வொருவரும் கலைக்கழகத்தின் ஒழுக்காற்றுக் கோவைக்கு அமைந்தவராதல் வேண்டும். ஒழுக்காற்றுக் கோவை, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் பட்டவாறாதல் வேண்டும்.

(2) அத்தகைய கோவையை மீறியுள்ளவராகக் காணப்படும் அல்லது ஒழுக்காற்றுச் சபையினால் ஏதேனும் மீறுகைக்குக் குற்றவாளியாகக் காணப்படும் எவரேனும் மாணவ அலுவலர், மாணவ அலுவலரின் நடத்தை கலைக்கழகத்தின் மிகச்சிறந்த நலனுக்கு உகந்ததல்லதென்ற பொருள்பட ஒழுக்காற்றுச் சபையினால் விதப்புரை செய்யப்படுவதன்மீது, நிறைவேற்றுப் பணிப்பாளரினால் கற்கைநெறியிலிருந்து மீளப்பெறப்படுவதற்கு ஆளாகலாம்.

(3) மாணவ அலுவலர்களின் ஒவ்வொரு துர்நடத்தைச் செயலும், அத்தகைய நிறுவனத்துக்கு ஏற்புடையற்பாலனவான அந்தந்தச் சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் நியதிகளின் படி அவசியமெனக் கருதப்படுகின்றவாறான ஒழுக்காற்று நடவடிக்கை தொடங்கப்படுவதற்கென, நிறைவேற்றுப் பணிப்பாளரினால் அத்தகைய அலுவலரின் அந்தந்த நிறுவனத் தலைவருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(4) வேண்டுமென்று அல்லது அசட்டையானமுறையில் அரசாங்க ஆதனத்துக்குச் சேதம் விளைவித்தமைக்குப் பொறுப் பானவரெனக் காணப்படும் எவரேனும் மாணவ அலுவலர், அத்தகைய சேதத்துக்காக கலைக்கழகத்திற்கு நட்டோத்தர வாதமளிப்பதற்கு ஆளாதல் வேண்டும்.

**21.** (1) கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியினரது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நிறைவேற்றுப் பணிப்பாளரினால் அல்லது நிறைவேற்றுப் பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட கலைக்கழகத்தின் வேறெவரேனும் அலுவலரினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கழகத்தின் பணியாட் டொகுதியினரின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.*

(2) கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியினரது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுதல், சபையினால் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கைமுறைக் கிணங்கியதாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் V

### நிதி

**22.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தேசியப் பொலிசுக் கலைக்கழக நிதியம்" என வழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கழகத்தின் நிதியம்.*

(2) சபையானது நிதியத்தை முகாமைசெய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் தொழிற்படுத்துவதற்கும் ஆன தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**23.** பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்–

*நிதியத்தினுள்ளான கொடுப்பனவு.*

(அ) கலைக்கழகத்தை முகாமைசெய்வதற்காகவும் நிருவகிப்பதற்காகவும் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து கலைக்கழகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டணங்கள் என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும்; அத்துடன்

(ஈ) கலைக்கழகம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக் கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*நிதியத்திலிருந்தான கொடுப்பனவு.*

**24.** பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்–

(அ) கலைக்கழகத்தைத் தாபித்தல், தொழிற்படுத்துதல் மற்றும்பேணுதல் என்பவற்றுக்கு அவசியமான செலவுகள்;

(ஆ) வருகைதரும் விரிவுரையாளர்களுக்கான கட்டணக் கொடுப்பனவு; அத்துடன்

(இ) கலைக்கழகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகவுள்ளனவெனச் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**25.** (1) சபையானது, கலைக்கழகத்தின் கணக்குகள் பற்றிய முறையான புத்தகங்களையும், எல்லா வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும், மற்றும் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களினதும் கணக்குகளையும் வைத்திருக்கும்படி 26ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட கணக்காளரைப் பணித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், கலைக்கழகத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) கலைக்கழகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(4) கலைக்கழகத்தின் வருடாந்தக் கணக்குகள், கணக்காளரினால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மூலம் அவற்றைச் சபைக்கு அனுப்பி வைக்கப்படச் செய்தலும் வேண்டும்.

*கணக்காளரொருவரை நியமித்தல்.*

**26.** (1) சபையானது, கலைக்கழகத்திற்கான கணக்காளரொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட கலைக்கழகத்தின் நிதியத்தினது நிருவாகத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் நிதியத்தின் வேறு நிதிசார் கருமங்களுக்கும், கணக்காளர், நிறைவேற்றுப் பணிப்பாளருக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

*வேதனாதிகளின் கொடுப்பனவு.*

**27.** (1) கலைக்கழகத்தின் எல்லா மாணவ அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும், அவர்களுக்கு ஏற்புடையற்பாலனவான இயைபான நிறுவனஞ்சார் வேதன ஒழுங்குவிதிகளில் விதிக்கப்படக்கூடியவாறன அத்தகைய வேதனாதிகளுக்கும் படிகளுக்கும் உரித்துடையோராதல் வேண்டும்.

(2) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட கலைக்கழகத்தின் எல்லா ஆளணியினரும், தற்போது தத்தமது நிறுவனங்களின்கீழுள்ள பயிற்சித் தாபனங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்குச் செலுத்தப்படக்கூடியவாறான எவையேனும் மேலதிகப் படிகளுக்கு உரித்துடையோராதல் வேண்டும்.

(3) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட கலைக்கழகத்தின் எல்லா ஆளணியினரும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்துக்குக்காலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு மேலதிகப் படிகளுக்கு உரித்துடையோராதல் வேண்டும்.

(4) கலைக்கழகத்தில் மாணவ அலுவலரொருவரின் பயிற்சிக் காலமானது, ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் படிகள் என்பவற்றின் நோக்கத்துக்காகக் கணக்கிடப்படற்பாலதான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் கடன் பெறுவதற்கான தத்துவங்கள்.

**28.** சபையானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் பயனுள்ளவகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகப் பெறலாம்.

## பாகம் VI

### பொது

சபையானது விதிகளை ஆக்குதல்.

**29.** (1) சபையானது, நிறைவேற்றுப் பணிப்பாளரின் விதப்புரையின் மேல் கலைக்கழகத்தால் மாணவ அலுவலர்களுக்காக வழங்கப்படவுள்ள கற்கைநெறிகள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், அது ஆக்கப்பட்டதன் மேல் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**30.** (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும், அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்–

(அ) கலைக்கழகத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் நிருவகித்தலும்;

(ஆ) ஒழுக்காற்றுக் கோவையை எடுத்துக்கூறுதல்;

(இ) விதித்துரைக்கப்படவேண்டிய அல்லது விதித்துரைக் கப்படக்கூடிய அல்லது அமைச்சரின் அபிப்பிராயப் படி அதுதொடர்பில் இச்சட்டத்தின் முறையான செயற் படுத்துகைக்கு அவசியமாகவுள்ள ஏற்பாடெதனையும் செய்யாத அல்லது போதியதற்ற ஏற்பாட்டைச் செய்கின்ற வேறேதேனும் கருமம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியாகக்கூடியவரை விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப் பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப்பின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைக் கான பாதுகாப்பு.

**31.** (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் கலைக்கழகத்தினால் நல்லெண்ணத் துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக கலைக்கழகத்திற் கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப் பின்மேல் கலைக்கழகத்தின் எவரேனும் உறுப்பினரி னால், அலுவலரினால், சேவையாளரினால் அல்லது முகவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

அமைதலாகாது.

(2) கலைக்கழகத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப் பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கலைக்கழகத் தினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளும் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கலைக்கழகத் திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவை யேனும் செலவுதொகைகளும் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது கலைக்கழகத்தின் பணிப்பின் மேல் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படுகின்ற வாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, நிதியத் திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சபையுறுப்பினர்களும் கலைக் கழகத்தின் அலுவலர்களும் சேவை யாளர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

**32.** சபையுறுப்பினர்களும் கலைக்கழகத்தின் எல்லா அலுவலர் களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

***33.*** கலைக்கழகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட் படவும் அதன் நோக்கத்துக்காகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட கலைக் கழகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.*

***34.*** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கலைக்கழகத்திற்கு அல்லது அது தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

*1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா திருத்தல்.*

***35.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***36.*** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

*பொருள் கோடல்.*

"கிளை" என்பது, குறிப்பிட்டவொரு பாடம் அல்லது துறைதொடர்பில் விசேடித்த பயிற்சியை நடாத்து வதற்குப் பொறுப்பாகவுள்ள கலைக்கழகத்தின் ஒரு பிரிவு என்று பொருளாகும்;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி என்று பொருளா கும்;

"சட்டத்தை வலுவுக்கிடும் அலுவலர்" என்பது, அதற்குக் குறித்தளிக்கப்பட்ட சட்டங்களை வலுவுக்கிடும் பொறுப்பு நியதிச்சட்டமுறையில் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பின் அலுவலரொருவர் என்று பொருளாகும்;

"பொலிசுத் திணைக்களம்" என்பது, (IIஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொலிசுத் திணைக்களம் என்று பொருளாகும்;

"பிரதான நிறைவேற்றலுவலர்" என்பது, -

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல் கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்று பொருளாகும்;

(ii) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, அத்திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்று பொருளாகும்; அத்துடன்

(iii) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக, அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளர் என்று பொருளாகும்; அத்துடன்

"மாணவ அலுவலர்கள்" என்பது, பயிற்சிக்காகவும் கல்விக் காகவும் கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற பொலிசுத் திணைக்களத்திலிருந்தான அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள், இலங்கையின் ஏனைய சட்ட வலுவுக்கிடும் முகவராண்மைகளின் அலுவலர்கள் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள பொலிசுச் சேவைகள் மற்றும் சட்ட வலுவுக்கிடும் முகவராண் மைகள் என்பவற்றிலிருந்தான அலுவலர்கள் என்று பொருளாகுமென்பதுடன், அவர்களையும் உள்ளடக் கும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்